**<u>கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்</u>**

**<u>முன்னிலை - திரு.சு.பொன்னுசுவாமி, பி.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,டி.எல்.எல்.ஏ.,டி.பி.எம்.ஐ.ஆர்.,</u>**

**<u>சுருக்கம்</u>**

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.பூ.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளர், கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம், கோவை - இளநிலை உதவியாளர் பதவியில் 07.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதி காண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/1756/2022. நாள்- 24.06.2022

<u>படிக்கப்பட்டது</u>

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்-14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்-20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.2387/PSD-1 /2020, நாள்-28.05.2020.
4. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/16386/2020-1, நாள் 29.07.2020 மற்றும் ஜி3/16386/20-4, நாள் 31.07.2020.

---------------

<u>ஆணை-</u>

மேலே 3-ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட திருமதி.பூ.புவனேஸ்வரி, 07.08.2020 முற்பகல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தனியரது பணிப்பதிவேடு பரிசீலனை செய்யப்பட்டதில் தனியரது ஓராண்டு பணிக்காலத்தில் முறையற்ற விடுப்பு ஏதும் துய்க்கவில்லை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என அறியவருகிறது.

மேலும் மேலே 3 -ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி தெரிவரது பணிவரன்முறையானது சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள் -IV-ல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக நிலுவையில் உள்ள ரிட்மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது.

The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examinations – IV for the year 2018-2019 and 2019-2020"

மேலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a) (i) மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32 -ன் கீழ் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்டதன் விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

(ஓம்/-XXXXXXXXXX)
கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
கோவை.

<u>பெறுநர்</u>

திருமதி.பூ.புவனேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம், கோவை. (உரியவழியாக).

<u>நகல்</u>

பணிப்பதிவேடு/முக்கிய ஆணைத் தொகுப்பு.

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது-</u>

தொழிலாளர் ஆணையர், சென்னை-06.

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 23/6/2022